மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பிரச்சினை எங்கோ செல்கிறது. அதற்காக காவல்துறை மானியத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம், கேள்வி கேட்கலாம், ஆதாரத்தோடு சொல்லுங்கள் என்று அறைகூவல் விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மானியக் கோரிக்கையின்மீது விவாதம் தொடரும். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று 16—4—1979 திங்கட்கிழமை காலை 9 மணி அளவுக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

137. 1962ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி உறுப்பினர் தேர்தல் நடத்துதல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 31—1—1979ஆம் தேதியிடப்பெற்ற 163ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS